**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக்கம்பனிம் - 2022**

----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (''தொகுதி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனம் மற்றும் அதன் தொகுதியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதற்கு தொகுதிக்குள் உள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதித் தகவல் தொடர்பான போதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். தொகுதி கணக்காய்வின் வழிகாட்டல், மேற்பார்வை மற்றும் செயலாற்றலிற்கு நாங்கள் பொறுப்பாக உள்ளோம். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மாத்திரமே பொறுப்பாவேன்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எல்கேஎஸ் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அத்தகைய ஏற்பாடுகளுக்கு முரணாக, மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 636,074.24 மில்லியன் நாணயமாற்று நட்டங்களுக்கு எதிராக ரூபா 108,997.26 மில்லியன் நாணயமாற்று ஆதாயம் ஈடுசெய்யப்பட்டிருந்தது. | வருமானக் கூற்றில் நாணயமாற்று விகித வேறுபாட்டை ஒரு தனி வரிசை உருப்படியாக CPC வெளிப்படுத்தியுள்ளது. மேலும், பெரும்பாலான ஆண்டுகளில் இது பொருண்மையானதாக உள்ளதால் இதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | எல்கேஎஸ் 01 இன் 97 ஆம் பந்தியின் பிரகாரம் ”வருமான அல்லது செலவின உருப்படிகள் பொருண்மையானதாக இருக்கும் போது ஒரு நிறுவனம் அவற்றின் தன்மை மற்றும் தொகையை தனித்தனியாக வெளிப்படுத்த வேண்டும்”. எனினும், ரூபா 108,997.26 மில்லியன் நாணயமாற்று ஆதாயத்தின் தன்மை மற்றும் தொகைகள் மற்றும் ரூபா 636,074.24 மில்லியன் நாணயமாற்று நட்டங்கள் நிதிக்கூற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமானக் கூற்றில் நாணயமாற்று விகித வேறுபாட்டை ஒரு தனி வரிசை உருப்படியாக CPC வெளிப்படுத்தியுள்ளது. மேலும், பெரும்பாலான ஆண்டுகளில் இது பொருண்மையானதாக உள்ளதால் இதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. | -மேற்படி- |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் எல்கேஎஸ் 01 இன் 32 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் உள்ள வரவு மீதிகளுக்கு எதிராக ரூபா 6,303 மில்லியன் கூட்டுமொத்தமான செலுத்த வேண்டிய மீதிகள் ஈடுசெய்யப்பட்டுள்ளன. | குறித்துக் கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| (ஈ) | ரூபா 3,191.08 மில்லியன் தொகையான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களானது எல்கேஎஸ் 16 இற்கு இணங்க அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமல், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 22 காணித்துண்டுகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த காணிகளின் உரிமைத்துவத்தை சட்ட நடவடிக்கை மூலம் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த காணிகளின் உரிமைத்துவத்தை தெளிவுபடுத்திய பின்னர் மீள்மதிப்பீடு தொடர்பான கணக்கீட்டு சீராக்கம் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **நிறுவனங்களுக்கு இடையிலான மீதிகள்** | | |
| (i) | கூட்டுத்தாபனத்தின் ஏடுகளின் பிரகாரம் துணைக்கம்பனியான சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் டேர்மினல் லிமிட்டட் (CPSTL) இற்கு செலுத்த வேண்டிய தேறிய தொகை ரூபா 6,211.04 மில்லியன் ஆகும், இதில் CPSTL இற்கு செலுத்த வேண்டிய மற்றும் அதனிடமிருந்து பெற வேண்டிய தொகைகள் முறையே ரூபா 7,458.10 மில்லியன் மற்றும் ரூபா 1,247.06 மில்லியன் என்பன உள்ளடங்கியுள்ளது. எனினும், CPSTL இன் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டிய தேறிய தொகை ரூபா 7,164.20 மில்லியனாக இருந்தது, இதில் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய மற்றும் அதற்கு செலுத்த வேண்டிய தொகைகள் முறையே ரூபா 8,000.36 மில்லியன் மற்றும் ரூபா 836.16 மில்லியன் என்பன உள்ளடங்கியுள்ளது. எனவே, இரண்டு நிறுவனங்களின் நிறுவனங்களுக்கிடையிலான மீதிகளில் ரூபா 953.16 மில்லியன் (முறையே ரூபா 542.26 மில்லியன் மற்றும் ரூபா 410.90 மில்லியன்) வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | CPC மற்றும் CPSTL இன் நிறுவனங்களுக்கிடையிலான செலுத்த வேண்டிய மீதிகளுக்கிடையே ரூபா 542.26 மில்லியன் வேறுபாடு மிகவும் தெளிவாக இனங்காணப்பட்டது. | அனைத்து சிக்கல்களுக்குரிய மீதிகளையும் தெளிவுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் சரியான புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் CPSTL இடமிருந்தான ரூபா 14.57 மில்லியன் உரிமைகோரக்கூடிய நட்டம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிறுவனங்களுக்கு இடையிலான செலுத்த வேண்டிய தேறிய மீதி மற்றும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுச் செலவினங்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | முகாமைத்துவக் கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | (i) சரியான புள்ளிவிபரங்களை பதிவு செய்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>(ii) அனைத்து கொடுக்கல்வாங்கல்களும்/நிகழ்வுகளும் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைப்பு**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021 ஆம் ஆண்டிற்கான CPSTL இன் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டில் மீளக்குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும், மீளாய்வாண்டின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் அந்த மீள்கூற்றின் விளைவு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள், வருமான வரிச் செலவினங்கள், பொருளிருப்புக்கள், பெறவேண்டிய வருமான வரி மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் முறையே ரூபா 27.01 மில்லியன், ரூபா 6.48 மில்லியன், ரூபா 121.62 மில்லியன், ரூபா 29.19 மில்லியன் மற்றும் ரூபா 92.43 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டட் (CPSTL) 2022 இன் இறுதி அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றை 2023.02.28 இற்கு முன்னர் ஒருங்கிணைக்கும் வகையில் தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை, எனவே, ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக 2023.02.21 இல் கிடைக்கக்கூடிய வரைவு நிதிக்கூற்றுக்களை கருத்தில் கொண்டு 2022 ஆம் ஆண்டிற்கான தொகுதி நிதிக்கூற்றுக்களை CPC தயாரித்துள்ளது. | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் சரியான புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டிற்கான CPSTL இன் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தொகைகளுக்கு இடையே விற்பனை கிரயத்தில் ரூபா 121.62 மில்லியன், வருமான வரியில் ரூபா 29.189 மில்லியன் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் 29.19 மில்லியன் தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | துணைக்கம்பனிகளின் (CPSTL மற்றும் TPTL) மிகவும் சரியான நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை CPC தயாரித்தது. எனினும், CPSTL ஆனது 2022.02.28 இற்கு முன்னர் ஒருங்கிணைப்பதற்கு இறுதி அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை. | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் சரியான புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**(இ) வியாபாரிகளுக்கான (Dealers) விற்பனை தரகு**

| | | | |
|---|---|---|---|
| | 2019 யூலை 30 ஆம் திகதிய 05/1231 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வியாபாரிகளின் தரகு தொடர்பான உச்ச வரம்பை புறக்கணித்து வியாபாரிகளின் தரகு செலுத்தப்பட்டு வருகிறது, மேல் மற்றும் கீழ் வரம்புகளுக்கு இடையே உள்ள ஒவ்வொரு தயாரிப்புக்கும் தற்காலிக நடவடிக்கையாக கொள்கையளவில், வியாபாரி செயற்படுத்தும் | போட்டி சந்தைப்படுத்தல் சூழலில் இந்த அறவீட்டு பொறிமுறை நடைமுறையில் இல்லாததால் CPC எதிர்பாராத எரிபொருள் விலை உயர்வுகளின் காரணமாக, அதிகபட்ச வரம்புகளை மீறுகிறதால் இருபது பில்லியன் ரூபாய்க்கு மேல் தள்ளுபடி | சபைத் தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட தரகு முழுமையாக அறவிடப்பட வேண்டும். |

வியாபாரிக்கு சொந்தமான வியாபாரிகளுக்கு 3% மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வியாபாரி செயற்படுத்தும் வியாபாரிகளுக்கு 2.75% தரகு விகிதத்தை சபை அங்கீகரித்துள்ளது. மண்ணெண்ணெய்க்கு 2 சதவீத நிலையான தரகு விகிதம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டின் போது மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 12,410.44 மில்லியன் வியாபாரி தரகு விற்பனை மற்றும் விநியோக செலவினங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 செப்தெம்பர் 01 இல் உள்ளவாறு திரண்ட மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த வியாபாரி தரகு ரூபா 23,576 மில்லியனாக இருந்தது.

பெற்றோலிய வியாபாரிகள் சங்கம் மற்றும் நான்கு ஏனைய வியாபாரிகள் மேற்படி சபைத் தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்ததுடன் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தற்போதைய நிலையைப் பேணுவதற்கான தடை உத்தரவை பிறப்பித்தது. எனினும், 2022 யூலை 15 இல் தடை உத்தரவு இரத்து செய்யப்பட்டிருந்தும், சபைத் தீர்மானத்தை கூட்டுத்தாபனம் அமுல்ப்படுத்த தவறியிருந்தது. அதன்பின்னர், வியாபாரிகள் சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் மேற்படி-சபைத் தீர்மானத்தின் மூலம் குறித்துரைக்கப்பட்டவாறு CPC வியாபாரிகளின் தரகை செலுத்துவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவுகளை நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. எனினும், பொதுக் கூட்டுத்தாபனத்தின் பணத்தை சேமிப்பதற்காக வியாபாரிகளின் தரகுகளை மேல் வரம்புகளைப் புறக்கணித்து செலுத்துவதை தடுத்தல் மற்றும் தடை உத்தரவை இரத்துச் செய்தல் என்பவற்றால் ஏற்படும் கடுமையான எதிர்மறையான தாக்கம் குறித்து செய்ய வேண்டியிருக்கும், இது கணிப்பிடப்பட்டு SAP இல் உள்ள வியாபாரிகளின் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனம் இன்னும் நீதிமன்றத்தை நம்பவைக்கத் தவறியிருந்தது. | | |

**(ஈ) மண்ணெண்ணெய் மானியம்**

| | | | |
|---|---|---|---|
| | பொதுத் திறைசேரி செயலாளரின் 2015 நவம்பர் 24 ஆம் திகதிய எவ்பி/06/100/02/2016 ஆம் இலக்க மற்றும் 2014 திசெம்பர் 04 ஆம் திகதிய ரீரீஜபி/1/83(1)ரீ ஆம் இலக்க கடிதங்கள் மூலம் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு இணங்க அரசாங்க மானியமாக எந்த விலைக் குறைப்பினாலும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நட்டத்தை மீள்நிரப்பு செய்வதற்கான உடன்படிக்கையொன்றுடன் அரசாங்கம் முடிவு செய்த விலையில் கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெய்யை விற்பனை செய்கிறது. 2014 முதல் 2022 வரையான காலப்பகுதியில் அறவிடப்படக்கூடிய மொத்த மானியத் தொகை ரூபா 74,626.54 மில்லியனாக இருந்த போதிலும் பொதுத் திறைசேரியானது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 4,459 மில்லியன் தொகையை மாத்திரமே மீள்நிரப்புச் செய்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய மொத்த மானியம் ரூபா 70,167.26 மில்லியன் தொகையாக இருந்த போதிலும் ரூபா 5,097.72 மில்லியன் தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த வருமானத்தின் மீதான அனைத்து நேரடி மற்றும் மறைமுக வரிகளும் கணக்கீடு செய்யப்பட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 4,459 மில்லியன் மீள்நிரப்பலின் பின்னர் அரசாங்கத்தால் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் பொது திறைசேரி மண்ணெண்ணெய் மானியத்தை மீள்நிரப்புச் செய்வதை உறுதிப்படுத்தவில்லை. அதன் பிரகாரம், அறவீட்டுத் தன்மையில் உள்ள கணிசமான ஐயப்பாடு காரணமாக நிதிக்கூற்றுக்களில் மண்ணெண்ணெய் மானியத்தை CPC இனங்கண்டிருக்கவில்லை. எனினும், மீதிகளை அறவிடுவதற்கு தொடர்ச்சியான பின்தொடர்தல்கள் செயன்முறையில் உள்ளன. | அறவிடப்படாத அனைத்து மானியங்களையும், வரிச் சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய அனைத்து பொருந்தக்கூடிய வரிகளையும் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் ஏடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை ஐ.அ..டொலர் 301.3 மில்லியன் ஆகும், அதே நேரம் ஸ்ரீ லங்கன் | கணக்கிணக்க நோக்கத்திற்காக தொடர்புடைய தகவல்கள் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸிடம் இருந்து கோரப்பட்டது இன்னும் பெறப்படவில்லை. எனினும், 2023.06.26 ஆம் | நிறுவனங்களுக்கு இடையே உள்ள அனைத்து இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகளையும் தீர்வு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | எயார்லைன்ஸிடமிருந்து பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம், கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ஐ.அ.டொலர் 235.5 மில்லியன் ஆகும். எனவே, அந்த இரண்டு ஏடுகளுக்கும் இடையில் ரூபா 21,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 65.8 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திகதிய எம்எவ்/பிஈ/011/சீஎம்/2023/152 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2023.04.30 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மீதியை ஸ்ரீ லங்கன் எயார்லைன் லிமிட்டட் மூலம் தீர்ப்பனவு செய்வதற்கு பொதுத் திறைசேரி இணங்கியிருந்தது. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) பொறுப்பு ரூபா 3,249.6 மில்லியனாக இருந்ததுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அறிக்கைகளின் பிரகாரம் இது ரூபா 3,254.5 மில்லியனாக இருந்தது. எனவே, நிதிக்கூற்றுக்கள் மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதியில் ரூபா 4.9 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | CPC நானாவித ஏனைய வருமான வாடிக்கையாளர்களிடமிருந்து SSCL ஐ சேகரித்து DIR இற்கு செலுத்துகிறது. ஏனைய வருமானத்தில் இருந்து உருவாக்கப்படும் தேறிய (வரியின் தேறியது) தொகை ஏனைய வருமானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது, எனவே, ரூபா 4.92 மில்லியன் தொகை SSCL செலவினப் பேரேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியான வரிப் பொறுப்பு பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த அனுமதிக்கப்படாத பெறுமதி சேர் வரி ரூபா 1,348.6 மில்லியனாக இருந்தது, அதே நேரம் பெறுமதி சேர் வரி அறிக்கைகளின் பிரகாரம் இது ரூபா 1,213.6 மில்லியனாக இருந்தது. எனவே, அந்த இரண்டு மீதிகளுக்கும் இடையே ரூபா 135.1 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | CPC நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் VAT ஐக் கணிப்பிட்டு, அறிக்கையில் திருத்தம் செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டுக்குரிய காலாண்டு ரீதியான வற் அறிக்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் பொருந்தும் வகையில் திருத்தப்படும். | IRD உடன் இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் தீர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் CEB இடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூபா 68,454.6 மில்லியனாக இருந்தது, அதே நேரம் CEB இன் ஏடுகளின் பிரகாரம் இது ரூபா 63,834.6 மில்லியனாக இருந்தது. எனவே, அந்த இரண்டு பதிவுகளுக்கும் இடையே ரூபா 4,620.0 மில்லியன் | குறித்துக் கொள்ளப்பட்டது. | CEB இன் அனைத்து இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகளையும் தீர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நீண்டகால நிலுவை உடனடியாக |

| | | |
|---|---|---|
| வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதில், ரூபா 753.6 மில்லியன் தொகையான வேறுபாடு 5 ஆண்டுகளாக தீர்வு செய்யப்படாமல் நிலுவையாக இருந்தது. | | அறவிடப்பட வேண்டும். |

### 1.5.4 துணைக்கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

துணைக் கம்பனியான றிங்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயம் என்னால் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டிற்காக ஏனைய துணைக் கம்பனியான சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டட்டின் (CPSTL) நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் பின்வரும் அவதானிப்புகளின் அடிப்படையில் என்னால் முனைப்பழியாக்கப்பட்டது.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எல்கேஏஎஸ் 12 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம், பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரிக் கடன்களைப் பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபம் கிடைக்கக்கூடிய சாத்தியம் உள்ள அளவிற்கு பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரிக் கடன்களை முன்கொண்டு செல்வதற்கு பிற்போடப்பட்ட வரிச் சொத்து இனங்காணப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான ரூபா 915.3 மில்லியன் பயன்படுத்தப்படாத வரி நட்டத்துடன் தொடர்புடைய ரூபா 274.7 மில்லியன் பிற்போடப்பட்ட வரிச் சொத்தை கம்பனி இனங்கண்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீட்டைத் தயாரிப்பதில் கவனக்குறைவாக விடுபட்டது. | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 24,175 உருப்படிகளை உள்ளடக்கிய ரூபா 8,391.6 மில்லியன் பெறுமதியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள், அந்த சொத்துக்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்யாமல் கம்பனியால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் எல்கேஏஎஸ் 16 இன் 51 ஆம் பந்திக்கு முரணாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2003 இல் கம்பனி தொடங்கப்பட்டதிலிருந்து கம்பனி அதன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. மேலும் இந்த நோக்கத்திற்காக சரியான மீள்மதிப்பீட்டுக் கொள்கை நிறுவப்படவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நடைமுறையல்லாத சொத்துக்கள் அத்தகைய சொத்துக்களின் நியாயமான பெறுமதியை பிரதிபலித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் தொடர்பான பெறுமதி கணிப்பீட்டிற்கு கம்பனி அமைச்சு மற்றும் பணிப்பாளர் சபையிடமிருந்து தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (இ) ரூபா 36.8 மில்லியன் பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தச் சொத்துக்களின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டுக்குக் கிடைக்கப்பெற்ற போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாக காட்டப்பட்டிருந்ததுடன் எல்கேஏஎஸ் 16 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு தொடங்கப்பட்டிருக்கவில்லை. | CPSTL ஆனது செயற்பாடுகளை தொடங்குவதற்கான அல்லது மூலதனச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான பொறுப்பை பயனர் செயற்பாட்டிற்கு ஒப்படைக்கும் போது, செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பூர்த்தி செய்தலிற்காக செயற்திட்டத்தின் பொறியியல் செயற்பாட்டினால் வழங்கப்பட்ட பூர்த்தியாக்கல் சான்றிதழ் அல்லது உறுதிப்பாட்டின் மூலம் மூலதன செயற்திட்டங்களின் கிரயத்தை மூலதனமாக்குகிறது. | -மேற்படி- |

### 1.5.5 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் ரூபா 615,053 மில்லியன் வரிக்குப் பின்னரான நட்டத்தை விளைவித்திருந்தது என்ற விடயத்தின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான நட்டங்கள் பிரதானமாக நாணயமாற்று வீத தளம்பல்களின் தொடர்ச்சியான எதிர்மறையான தாக்கம், குறுகிய கால கடன்களின் கணிசமான அதிகரிப்பு காரணமாக நிதிச் செலவினங்களில் அதிகரிப்பு, பொருத்தமற்ற விலைக் கொள்கை என்பவற்றின் காரணமாக ஏற்பட்டதுடன் முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற இழப்புக்காப்பு கொடுக்கல்வாங்கல்கள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட கடுமையான நட்டங்களின் எதிர்மறையான தாக்கம் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களில் மேலும் குறைவை ஏற்படுத்தியிருந்தது. இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கான ரூபா 884,093 மில்லியன் தொகையான கடன்கள் மற்றும் உண்டியல்கள் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதே தொகை 2022 திசெம்பர் 31 இல் மூலதன உட்பாய்ச்சல்களாக | குறித்துக் கொள்ளப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படுகின்றதுடன் CPC ஆல் நடைமுறைப்படுத்தக்கூடிய எதிர்காலத்திற்காகச் செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே, CPC தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு சிக்கலின்றி செயற்படுகின்றதெனவும் அதன் பிரகாரம் CPC நிதிக்கூற்றுக்களைத் தயாரித்ததெனவும் CPC நம்புகிறது. | கூட்டுத்தாபனத்தின் நிதி ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு முகாமைத்துவம் விசேட கவனம் செலுத்த வேண்டும். |

இனங்காணப்பட்டிருந்தது, கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மேலும் ரூபா 85,712 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்துக்களை பதிவுசெய்திருந்தது. இதனால், அரசாங்கத்தின் நிதியுதவி இல்லாமல் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கூட்டுத்தாபனத்தின் இயலுமை சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

### 1.5.6 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **பெறவேண்டிய மீதிகளை பதிவழித்தல்** | | | |
| (அ) | போதிய தகவல்கள் இல்லாததால், கூட்டுத்தாபனத்தின் கணக்குப் புத்தகங்களில் இருந்து ரூபா 1,516 மில்லியன் தொகையான பெறவேண்டிய மீதியை பதிவழிப்பதற்கு சபை (2021 யூலை 22 ஆம் திகதிய 08/1252 ஆம் இலக்க சபைத் தீர்மானம்) அங்கீகாரம் அளித்துள்ளது. எனினும், முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பெறவேண்டியவைகளை பதிவழிப்பதற்கான தீர்மானமொன்றை எடுப்பதற்கு முன்னர் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது நிகழ்வுகள் தொடர்பாக ஏதேனும் மோசடி நடவடிக்கைகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை சரிபார்ப்பதற்கு சபை சரியான நடவடிக்கையை எடுத்திருந்ததா என்பதை கணக்காய்வின் போது கண்டறிய முடியவில்லை. மேலும், இதுவரை அந்த மீதி தொடர்பான ஆவணங்களை பேணுவதற்கு பொறுப்பேற்றிருந்த உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளதா என்பதை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. | 2011 ஆம் ஆண்டில் பதிவுகளை மேற்கொண்டதால் பேரேட்டில் இருந்து பதிவழிப்பு மீதிகள் தோன்றின. இந்த பதிவுகளின் போதுமான ஆவணங்கள், விபரங்கள் மற்றும் தகவல்கள் SAP முறைமையில் காணப்படாததுடன் நிதிச் செயற்பாட்டில் வைத்திருக்க முடியாது.<br><br>மறுபுறம், போதுமான தகவல்கள் மற்றும் பதிவுகள் பௌதீக ரீதியாக கிடைக்காததால், இந்த தொகைகளை அறவிடுவது சாத்தியமில்லை. | இது சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டியதுடன் தகவல் தொழில்நுட்ப பொது கட்டுப்பாடுகளை மேம்படுத்தும் போது முறையான ஏடுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு, ரூபா 39.0 மில்லியன் தொகையான | ரூபா 193.217 மில்லியனில். ரூபா 23.256 மில்லியன் பின்னர் தீர்ப்பனவு | கணக்காய்விற்கு போதுமான மற்றும் |

| | | |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் வரவு மீதிகள் தொடர்பாக போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம், அந்த மீதிகளின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மையை கணக்காய்வின் போது திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை. | செய்யப்பட்டிருந்தது. சட்ட வழக்கொன்றை கொண்டிருந்த பிவி ஓயிலில் இருந்து பெறவேண்டிய ரூபா 130.940 மில்லியன் இந்த தொகையில் உள்ளடங்கியுள்ளது. | பொருத்தமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 48 வாடிக்கையாளர்களிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களில் காட்டப்பட்டுள்ள வியாபார பெறவேண்டிய மீதிகளுக்கு இடையே ரூபா 413.8 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது. அந்த 48 வாடிக்கையாளர்களில், 12 வாடிக்கையாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி, பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தொகையை விட ரூபா 32.9 மில்லியன் அதிகமாக இருந்தது, அதே நேரம் ஏனைய 36 வாடிக்கையாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி, பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட தொகையை விட ரூபா 380.9 மில்லியன் குறைவாக இருந்தது. | MUF, வியாபாரியின் ஊக்குவிப்பு படிகள், O/P தரகுகள், தேறாத காசோலைகள் போன்றன இந்த வேறுபாடுகளுக்கான காரணங்களாகும். | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் தீர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வியாபார பெறவேண்டியவைகளின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 908.0 மில்லியன் தொகையுடனான 69 வரவு மீதிகளும், ரூபா 8.7 மில்லியன் தொகையுடனான 44 செலவு மீதிகளும் 05 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாதிருந்தன/ தீர்ப்பனவு செய்யப்படாமலிருந்தன. அதன் பிரகாரம் அந்த மீதிகளின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மையை கணக்காய்வின் போது கண்டறிய முடியவில்லை. | 5 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள 75 வாடிக்கையாளர்களின் வியாபார பெறவேண்டிய வரவு மீதிகளின் பிரகாரம் இனங்காணப்பட்டு, உரிய அங்கீகாரங்களுடன் அவற்றை தீர்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். | நீண்டகாலம் நிலுவையாக உள்ள பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு அல்லது தீர்வு நடவடிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள ரூபா 137 மில்லியன் தொகையான பன்னிரண்டு வரவு மீதிகளும், 01 முதல் 05 ஆண்டுகள் வரை நிலுவையாக உள்ள ரூபா 44 மில்லியன் தொகையான 13 வரவு மீதிகளும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் | இதில் சட்ட வழக்கொன்றை கொண்டிருந்த பிவி ஓயில் இடமிருந்து பெறவேண்டிய ரூபா 130.940 மில்லியன் உள்ளடங்கியுள்ளது. | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய நீண்ட கால வரவு மீதிகளை தீர்ப்பனவு |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. மேலும், வரவு மீதிகளை அறவிடுவதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமல், பின்னர் அந்த தரப்பினருடன் கூட்டுத்தாபனம் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, அந்த மீதிகளின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மை கணக்காய்வின் போது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. | ஏனைய வரவு மீதிகளை சரிபார்க்கும் பணி இடம்பெற்று வருகிறது. மேலும் 05 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள கப்பல் உத்தரவாதத்தை விடுவிப்பதற்காக வங்கிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | செய்வதற்கு அல்லது தீர்வு நடவடிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பிஈடி 01/2021(i) ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை – அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கையேடு | | | |
| (i) | 2.3 ஆம் வழிகாட்டல் | கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வணிகம், தார் வணிகம், பதுங்கு குழி வணிகம் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றிற்கான அனைத்து முக்கிய நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய கையேடுகளை கூட்டுத்தாபனம் தயாரித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வணிகம், தார் வணிகம், பதுங்கு குழி வணிகம் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றிற்கான கையேட்டை தயாரிப்பதற்காக விபரங்கள் சேகரிக்கப்பட்டு, கையேடுகளின் வரைவை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. | உரிய வழிகாட்டலுடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) | 7.7 ஆம் வழிகாட்டல் | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை, துணைக்கம்பனிகளின் செயலாற்றலை கண்காணிக்கும் ஒரு கட்டமைப்பை நிறுவியிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பிஈடி 01/2021(i) ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை – அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டல்கள் | | | |
| (i) | 2.2.5 (அ) வழிகாட்டல் | பங்கிலாபங்கள், பங்கு மற்றும் பங்குரிமைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் முக்கிய கொடுக்கல்வாங்கல்கள் உள்ளிட்ட சிக்கல்களைத் தீர்க்கும் துணைக் கொள்கையை கூட்டுத்தாபனம் நிறுவியிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| (ii) | 2.2.5 (ஆ) வழிகாட்டல் | • கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அதன் துணைக் கம்பனிகளின் விவகாரங்களை பரந்த ஒழுங்குமுறை மற்றும் சட்ட கட்டமைப்பிற்குள் மதிப்பாய்வு செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கவில்லை. எனவே, சபைக் கூட்டத்தில் துணைக் கம்பனிகளின் செயலாற்றலை கூட்டுத்தாபனம் தொடர்ந்து மதிப்பாய்வு செய்திருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| | | • துணைக்கம்பனிகளுக்கு இடையேயான நிறுவன கொடுக்கல்வாங்கல்களை கூட்டுத்தாபனம் கண்காணித்திருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 235) | 2011 முதல் 2022 வரையிலான காலப்பகுதி தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 42,581 | 2022 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட அனைத்து சரக்குகளுக்கும் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் நாளதுவரை செலுத்த வேண்டிய தீர்வைகள்/ வரிகளின் கொடுப்பனவு தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2021 திசெம்பர் 30 ஆம் திகதிய ரீஜபி/ரீபி/09/06-02/21 ஆம் இலக்க கடிதம் | மில்லியன் தொகையான திரண்ட சுங்கத் தீர்வை ஏற்பாட்டிற்கு முரணாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், நிலுவையாக உள்ள சுங்க தீர்வைகள்/ வரிகளின் கொடுப்பனவு தொடர்பாக பொதுத் திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருக்கவில்லை. | தற்காலிக சுங்கத் தீர்வைகள் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன, மேலும் உண்மையான தீர்வை கணிப்பீடுகள் மற்றும் மேற்படி சரக்குகளுக்கு செலுத்தப்பட்ட தற்காலிக தீர்வை ஆகியவற்றிற்கிடையே ஏதேனும் வேறுபாடு இருந்தால், வேறுபாடு சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படும். | |
| (ஈ) | 2019 இன் 20 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தப்பட்ட) சட்டம் | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 3,243 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக தீர்ப்பனவு செய்யப்படாமல் நீண்டகாலத்திற்கு கணக்குப் புத்தகங்களில் இருந்தது. மேலும், திருத்தப்பட்ட NBT அறிக்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு (IRD) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டமடையும் நிலைமை மற்றும் எதிர்மறையான உரிமை மூலதன நிலைமை காரணமாக கூட்டுத்தாபனம் பல காசுப்பாய்ச்சல் பற்றாக்குறை மற்றும் சிரமங்களை எதிர்கொள்கிறது. எனவே, வழங்கப்பட்ட ரூபா 2,627 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் காலத்திற்கு காலம் நிலுவையாக உள்ள வரி விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக IRD உடனான கூட்டங்கள் மூலம் அது தொடர்பான பொறுப்புக்கள் IRD இற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | திருத்தப்பட்ட NBT அறிக்கைகள் IRD இற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் IRD உடன் இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் தீர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 615,053.1 மில்லியன் நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 81,816.4 மில்லியனாக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 533,236.7 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நாணயமாற்று விகித வேறுபாடுகள், நிதிச் செலவினங்கள் மற்றும் விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் முறையே ரூபா 493,789.9 மில்லியன், ரூபா 93,891.3 மில்லியன் மற்றும் ரூபா 10,296.1 மில்லியனால் அதிகரித்தமையே இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | கூட்டுத்தாபனம் | | தொகுதி | |
|---|---|---|---|---|
| **விகிதம்** | **2022** | **2021 (மீளக்குறிப்பிடப்பட்டது)** | **2022** | **2021 (மீளக்குறிப்பிடப்பட்டது)** |
| **இலாபத்தன்மை விகிதம்** | | | | |
| மொத்த இலாப/ (நட்ட) விகிதம் (%) | 3.47 | (0.70) | 2.93 | (2.01) |
| செயற்பாட்டு இலாப/ (நட்ட) விகிதம் (%) | (0.54) | (7.07) | (0.61) | (6.83) |
| தேறிய இலாப/ (நட்ட) விகிதம் (%) | (53.54) | (13.99) | (53.74) | (13.79) |
| **திரவத்தன்மை விகிதம்** | | | | |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.77 | 0.48 | 0.79 | 0.49 |
| விரைவு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.51 | 0.42 | 0.53 | 0.44 |
| **முதலீட்டு விகிதம்** | | | | |
| ஈடுபடுத்திய முதல் மீதான திரும்பல் (ROCE) (%) | (701.13) | (16.28) | (1641.13) | (33.22) |
| இணைவு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 3.84 | 1.46 | 5.18 | 1.56 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப/ (நட்ட) விகிதம் மற்றும் செயற்பாட்டு இலாப/ (நட்ட) விகிதம் என்பன முறையே 596 சதவீதம் மற்றும் 92 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் தேறிய இலாப/ (நட்ட) விகிதம் 283 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் ஈடுபடுத்திய முதல் மீதான திரும்பல் 4,206 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **மாதாந்த பயன்பாட்டுக் கட்டணத்தின் (MUF) சேகரிப்பு**<br>2013 ஒக்தோபர் 29 ஆம் திகதிய 38/1140 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வியாபாரி செயற்படுத்தும் (CODO) | 2022 யூலை 05 ஆம் திகதிய 1053 ஆம் இலக்க சுற்றறிக்கையை அனைத்து CODO வகை வியாபாரிகளுக்கும் 2023 | சபையின் தீர்மானங்கள் தாமதமின்றி அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிரப்பு நிலையங்கள் மற்றும் திறைசேரிக்கு சொந்தமான வியாபாரி செயற்படுத்தும் (TODO) நிரப்பு நிலையங்களிலிருந்து மாதாந்த பயன்பாட்டுக் கட்டணத்தை (MUF) 2014 சனவரி 01 முதல் அமலுக்கு வரும் வகையில் அறவிடுவதற்கு சபை அங்கீகாரம் அளித்துள்ளது. எனினும், தீர்மானம் முழுமையாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 220 இற்கும் மேற்பட்ட CODO மற்றும் TODO வியாபாரிகளில் 11 வியாபாரிகளிடமிருந்து மாத்திரமே MUF அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்படாத MUF ரூபா 3,416 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | யூலை 01 முதல் MUF அறவிடப்படும் என்றும் அதற்குரிய MUF ஐ ஒவ்வொரு மாதமும் 25 ஆம் திகதி செலுத்த வேண்டும் என்றும் வழங்கியுள்ளோம். எனினும், வியாபாரி சங்கத்தினால் கௌரவ அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுடன் பலமுறை கலந்துரையாடிய பின்னரும் இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பொறுப்பான தரப்பினரிடமிருந்து வருமான இழப்பை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுவான பயனர் வசதிகள் தொடர்பான பின்வரும் சிக்கல்கள் முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றைச் சீர்செய்வதற்கு கூட்டுத்தாபனம் துரித நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | |
| (i) | பொதுவான பயனர் வசதி பங்குதாரர்கள் உடன்படிக்கை 2008 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்த போதிலும் நிறுவனங்களுக்கான ஆளுகை நடைமுறைகள் மற்றும் உற்பத்திக் கட்டணங்களை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்படும் விலை சூத்திரம் மற்றும் slab கட்டணங்கள் உட்பட போக்குவரத்து செலவினங்கள் உள்ளடங்கிய குறித்த உடன்படிக்கையின் கீழ் உள்ள பொதுவான பயனர் வசதிகள் அனைத்து தொடர்புடைய தரப்பினரின் உடன்படிக்கையுடன் திருத்தப்பட்டிருக்கவில்லை. | CPC மற்றும் CPSTL இடையே 2019 இல் உற்பத்திக் கட்டணம் மற்றும் போக்குவரத்து செலவினங்களை தீர்மானிப்பதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இணங்கப்பட்ட சூத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு தனிக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. குழு பரிந்துரையின் பிரகாரம் 2019 ஏப்ரலில் கடைசி திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத் திகதிக்குப் பின்னர் எந்தத் திருத்தமும் செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் கூட்டுத்தாபனம் தாமதமின்றி உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட வேண்டும். |
| (ii) | கூட்டுத்தாபனம் 2019 மே 13 இல் LIOC ஐ தவிர்த்து CPSTL உடன் உடன்படிக்கையொன்றை | CPC இற்கு CPSTL வழங்கிய சேவைகளுக்காக CPC மற்றும் CPSTL | சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திட்டிருந்தது, இதில் பெற்றோலியப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் CPC மற்றும் CPSTL இடையேயான உற்பத்தியை தீர்மானிக்கும் முறை என்பன உள்ளடங்குகின்றன. அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் 2003 திசெம்பர் 30 ஆம் திகதிய பொதுவான பயனர் வசதிகள் பங்குதாரர் உடன்படிக்கையின் (GOSL/CPC/LIOC) முக்கிய பயனராகவும், ஒரு தரப்பினராகவும் LIOC உடன் தொடர்புடையதாக உள்ள போதிலும் LIOC கருத்தில் கொண்டிருக்கவில்லை. எனவே, கூட்டுத்தாபனம் மற்றும் CPSTL இடையே உள்ளிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை LIOC மறுத்தால், சாதகமற்ற நிலைமைகள் மற்றும் கிரயம் தொடர்பான எந்தவொரு தாக்கத்தையும் கூட்டுத்தாபனம் ஏற்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | என்பவற்றிற்கு இடையே 2019 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை உள்ளது. CPSTL மற்றும் LIOC இடையே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இந்த உடன்படிக்கையில் சேர்க்க முடியாது. | ஒத்துழைப்புடன் கூட்டுத்தாபனம் தாமதமின்றி உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட வேண்டும். |
| (iii) | 2003 திசெம்பர் 30 ஆம் திகதிய பொதுவான பயனர் வசதிகள் பங்குதாரர்களின் உடன்படிக்கை (CPC, LIOC மற்றும் GOSL ஆகியவற்றுக்கு இடையேயான) மற்றும் 2019 மே 13 ஆம் திகதிய கூட்டுத்தாபனம் மற்றும் CPSTL இடையேயான உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு குழாய்கள் அல்லது குழாய்களின் பகுதிகளை பராமரித்தல் மற்றும் 02 மாதங்கள் எரிபொருள் இருப்பை பேணுவதற்கு களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்குதல் CPSTL இன் பொறுப்பாகும். எனினும், குழாய்களில் அடைப்பு மற்றும் களஞ்சிய முறைமையில் உள்ள வினைத்திறனின்மை காரணமாக கப்பல்களில் இருந்து எரிபொருளை இறக்குவதில் தாமதம் ஏற்பட்டதன் விளைவாக, சேவை வழங்குநருக்கு | CPSTL ஆல் பேணப்படும் சட்ட உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக வெளியேறும் துறைமுகத்தில் மேலதிக நேரத்தை செலவிட்ட கப்பல்களுக்கு CPSTL இடம் வழங்குநர்கள் சமர்ப்பித்த உரிமைகோரல் தொகைகளை அறவிடுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் கிரயத்தைக் குறைப்பதற்கு முகாமைத்துவம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தகைய கிரயத்தை வழங்காமல், கூட்டுத்தாபனம் தாமதக் கட்டணங்களை செலுத்த வேண்டியிருந்தது. | | |
| (iv) | 2019 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை எண்ணெய் நிறுவலுக்கு 12” டயா மற்றும் 5,500 மீற்றர் நீளமான குழாயை புனரமைப்பது தொடர்பாக கூட்டுத்தாபனம் ரூபா 250 மில்லியன் தொகையை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தியிருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கூட்டுத்தாபனம் செலுத்திய தொகையை பின்னர் அறவிடுவதற்கு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருக்கவில்லை அல்லது CPSTL உடன் பேச்சுவார்த்தையை நடாத்தியிருக்கவில்லை. | இந்த விடயம் 2021.07.28 இல் நடைபெற்ற அமைச்சு கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது, மேலும் CPC இற்கு ரூபா 250 மில்லியன் கிரயத்தை திருப்பி செலுத்துவதற்கு முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என தலைவரான CPSTL ஆல் அறிவிக்கப்பட்டவாறு குறித்துக் கொள்ளப்பட்டது. | CPSTL உடன் பேச்சுவார்த்தையை நடாத்தி அறவீட்டுப் பொறிமுறையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நாட்டில் எரிபொருள் விநியோகத்திற்கான களஞ்சிய மற்றும் முனைய வசதிகள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான உற்பத்திக் கட்டணமாக ரூபா 62,000 மில்லியன் தொகை CPSTL இற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், புதிய உட்கட்டமைப்பு வசதிகளை வடிவமைத்து மேம்படுத்துவதற்கும், இருக்கும் வசதிகளை உடனடியாகப் பேணுவதற்கும் CPSTL முறையான நடவடிக்கையை எடுத்ததா என்பதைக் கண்டறிவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகள் காணப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | CPSTL இற்கு மாற்றப்பட்ட நிதியானது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | களஞ்சியங்களின் செயற்பாடு மற்றும் எரிபொருள் இருப்பு விநியோகம் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்ட அனைத்து நட்டங்ககளும் CPSTL இடமிருந்து கூட்டுத்தாபனத்தால் அறவிடுவதற்கு உரித்துண்டு. | 2022 ஆம் ஆண்டின் உண்மையான செயற்பாட்டு நட்டம் அனுமதிக்கப்பட்ட வரம்புகளை விட குறைவாக இருந்தது. எனினும், CPC மற்றும் CPSTL உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய விசேட | செயற்பாட்டு நட்டம் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட வரம்புகளை மீள்மதிப்பீடு செய்து நாளதுவரையாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், 1968 யூன் 17 இல் CPC இன் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்ட டிப்போ இருப்பு நட்டங்களின் அனுமதிக்கப்பட்ட வரம்புகள் கூட்டுத்தாபனத்தால் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தால் ஏற்படுத்தப்பட்ட செயற்பாட்டு நட்டம் ரூபா 468.85 மில்லியனாக இருந்தது. | குழுவொன்றை நியமித்து, அனுமதிக்கப்பட்ட வரம்புகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>CPC இன் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை, CPSTL ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்காததால், CPC மற்றும் CPSTL உடன்படிக்கையில் இதை இணைக்க முடியவில்லை என்பதால் இறுதி தீர்மானம் நிலுவையாக உள்ளது. | வேண்டும். |
| (ஈ) | 2007 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகை தொடர்பாக இடம்பெற்ற இழப்புக்காப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 14,028 மில்லியனாக இருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 8,648,300 ஐ கோருவதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றை கொமர்ஷல் வங்கி தாக்கல் செய்திருந்தது. | கொமர்ஷல் வங்கிக்கும் CPC இற்கும் இடையிலான வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது. | இவ் விடயத்தை விரைவில் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட SAP ERP முறைமையின் ஆரம்பப் பதிப்பான (SAP ECC 6.0) ERP ஆனது 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து நாளதுவரை எந்த மேம்படுத்தலும் இல்லாமல் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய ஏடிஎம்/12/01/19 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் எரிசக்தி அமைச்சின் செயலாளர் CPC மற்றும் CPSTL இன் | பதிப்பு புதுப்பித்தல் தொடர்பான SAP தயார்நிலை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு SAP பரிந்துரைத்த தரப்பினருக்கு CPSTL வழங்கியது. CPC மற்றும் CPSTL விபரங்களுடன் தயார்நிலை அறிக்கையைப் பெற்ற பின்னர், பதிப்பு மேம்படுத்தல் தொடர்பாக மேலதிக நடவடிக்கையை எடுக்கிறது. | SAP முறைமையை மேம்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தலைவருக்கு SAP முறைமையின் பயன்பாடு தொடர்பான சாத்தியவள ஆய்வு மற்றும் பணப் பெறுமதிக்கான கணக்காய்வை மேற்கொள்வதற்கும் காலாவதியான முறையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதற்கு வழிநடாத்தல் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அறிவுறுத்தினார். எனினும், SAP முறைமையை மேம்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் துரித நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | |
| **(ஊ)** | **வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து பெறவேண்டியவை**<br>கணக்காய்வு மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 முதல் 2018 வரையிலான காலப்பகுதி தொடர்பாக தாமதமான விநியோகம்/ குறுகிய ஏற்றுதல் காரணமாக விதிக்கப்பட்ட தண்டப்பணம், ஏற்றுக்கொள்ள முடியாத தரத்திற்காக வெளிப்புற நட்டங்களுக்கான தண்டப்பணம் மற்றும் விலை வேறுபாடுகளால் ஏற்படும் நட்டங்களாக ரூபா 1,632 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.39 மில்லியன் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரை, அவற்றை அறவிடுவதற்கு அல்லது அந்த வெளிநாட்டு வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு எதிராக அவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கையை கூட்டுத்தாபனம் எடுத்திருக்கவில்லை. | ஐ.அ.டொலர் 4.392 மில்லியன் பெறவேண்டிய தொகையில். ஐ.அ.டொலர் 3.016 M/s வைற்றல் ஏசியா (பிறைவேட்) லிமிட்டட்டிற்குரியதாகும். மேலும் வழங்குநர் தமது நிலுவையை 2023/09/30 அளவில் தீர்ப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்தார். நிலுவைத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு DGM (C & SC) இற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள மீதிகளை அறவிடுவதற்கு அல்லது செலுத்த வேண்டிய தொகைகளுக்கு எதிராக தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | எனது முன்னைய ஆண்டு அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளவாறு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் CEB உட்பட முக்கிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் விநியோகத்திற்கான முறையான உடன்படிக்கைகள் | CEB உடனான எரிபொருள் விநியோக உடன்படிக்கை (FSA) இறுதி செய்யப்பட்டிருந்தும், கொடுப்பனவு பொறிமுறை மற்றும் CEB இன் கொடுப்பனவு தொடர்பான உத்தரவாதம் இல்லாத | முறையான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | காரணத்தால் அவர் கையொப்பமிட்ட உடன்படிக்கை நிறைவேற்றப்படவில்லை. | |
| **(ஏ)** | **எரிபொருள் இருப்புக்களின் விற்பனை மற்றும் விநியோகம்** | | |
| (i) | கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டவாறு, வியாபாரிகள் மற்றும் நுகர்வோரிடமிருந்து எரிபொருள் கட்டளைகளை ஏற்றுக்கொள்ளுதல், கடன் வரம்புகள் மற்றும் தொடர்புடைய முற்தகைமைகளை சரிபார்த்தல், விலைப்பட்டியல்களை வழங்குதல், வியாபாரிகளிடமிருந்து பணத்தை அறவிடுதல் போன்ற பெற்றோலியப் பொருட்களை வழங்குவதில் உள்ள பெரும்பாலான நடவடிக்கைகள் CPSTL ஆல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், அந்த நடவடிக்கைகள் சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் குறிப்பாக கூட்டுத்தாபனத்தால் கையாளப்பட்டிருக்க வேண்டும். அதன் பிரகாரம், கூட்டுத்தாபனம் அதன் பெற்றோலியப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகத்தின் நோக்கெல்லைக்குள் வராத செயற்பாட்டில் CPSTL ஈடுபடுவதற்கு கூட்டுத்தாபனம் அனுமதித்திருந்தது. மேலும்இலங்கை அரசாங்கம் (GOSL), CPC மற்றும் LIOC ஆகியவற்றுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட 2003 திசெம்பர் 30 ஆம் திகதிய பொதுவான பயனர் வசதிகள் பங்குதாரரின் உடன்படிக்கையில் (GOSL/CPC/LIOC) அத்தகைய செயற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை. | சந்தைப்படுத்தல் செயற்பாடு/ பிராந்திய அலுவலகங்கள் மூலம் SAP மூலம் விற்பனை கட்டளைகளை உருவாக்குவதற்கு பதவியணியினரிற்கு பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம் அதன் கடமைகளைச் செய்ய வேண்டும். |
| (ii) | பெற்றோலியப் பொருட்களின் போதுமான இருப்புக்கள் இல்லாததால், நாடு முழுவதும் உள்ள வியாபாரிகள் மூலம் பெற்றோலியப் பொருட்களை விநியோகிப்பதற்கான முன்னுரிமைப் பட்டியல்கள் மற்றும் | -மேற்படி- | |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய நுகர்வோர்கள் கூட்டுத்தாபனத்தால் CPSTL இற்கு தினமும் வழங்கப்பட்டிருந்தது. 2022 யூன் 07 முதல் 18 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (iii) | CPSTL இன் கட்டளை செயற்பாடு (OF) கூட்டுத்தாபனம் வழங்கிய முன்னுரிமைப் பட்டியலைக் கருத்தில் கொள்ளாமல், வியாபாரிகளுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக SAP முறைமையில் தினசரி வெளியே வருவதைத் தயாரித்திருந்தது. அதன் பிரகாரம் நெருக்கடியான சூழ்நிலையில் கூட்டுத்தாபனத்தின் எந்த மேற்பார்வையும் இன்றி CPSTL இன் விநியோக செயற்பாடு (DF) முன்னுரிமைப் பட்டியலுக்கு வெளியே எரிபொருளை வழங்கியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும், LIOC இருப்புக்களின் விநியோகம் கூட்டுத்தாபனத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | -மேற்படி- | விநியோகங்கள் முறையாக இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் மேற்பார்வை செய்ய வேண்டும். |
| (iv) | 2,509 பெற்றோலிய பொருள் சரக்குகள் (சரக்கொன்றிற்கு 6,600 லீற்றர்கள்) கூட்டுத்தாபனத்தின் முன்னுரிமைப் பட்டியலுக்கு வெளியே கூட்டுத்தாபனத்திற்கான முன் அங்கீகாரம் அல்லது அறிவிப்பைப் பெறாமல் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் 2,524 சுமைகள் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணங்களை வழங்காமல் CPSTL ஆல் வியாபாரிகளுக்கு அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (v) | கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் அந்நியச் செலாவணி பிரச்சனைகள் தொடர்பாக சில நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஐ.அ.டொலர்களில் பணம் செலுத்திய கம்பனிகள் அல்லது தொழில்முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியிருந்தது. அதன் பிரகாரம் டொலர் அடிப்படையில் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்வதற்கு தயாராக இருக்கும் நுகர்வோரின் விசேட முன்னுரிமைப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு CPSTL இற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஐ.அ.டொலரில் கொடுப்பனவு பெறப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ள போதிலும் முன்னுரிமைப் பட்டியலின் பிரகாரம் உரிய திகதிக்குள் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (vi) | கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தில் 1,143 வியாபாரிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022 யூன் மாதத்தில் நடாத்தப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில், 120 வியாபாரிகளுக்கு எந்த பெற்றோல் சுமையும் வழங்கப்பட்டிருக்காதமையும், 22 வியாபாரிகளுக்கு தலா ஒரு சுமை (6600 லீற்றர்) பெற்றோல் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. அதேநேரம், அந்த மாதத்தில் 08 வியாபாரிகளுக்கு தலா 210,000 லீற்றர்களுக்கு மேல் வழங்கப்பட்டிருந்தது. 73 வியாபாரிகளுக்கு LAD விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை, அதேநேரம் 08 வியாபாரிகளுக்கு தலா ஒரு சுமை மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், 17 வியாபாரிகளுக்கு தலா 200,000 லீற்றர்களுக்கு மேல் LAD வழங்கப்பட்டிருந்தது. மேலும், 66 வியாபாரிகளுக்கு அந்த | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் வெள்ளை எண்ணெய் தயாரிப்பு எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை, அதே நேரம் 06 வியாபாரிகளுக்கு தலா ஒரு சுமை மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த மாதத்தில் 15 வியாபாரிகளுக்கு தலா 350,000 லீற்றரிற்கு மேல் வெள்ளை எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சமத்துவமற்ற மற்றும் நியாயப்படுத்த முடியாத வெள்ளை எண்ணெய் விநியோக முறையானது நெருக்கடியான காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்தமையானது நாட்டில் அதிகப்படியான வரிசைகள் மற்றும் பொது அமைதியின்மைக்கு வழிவகுத்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், இதுபோன்ற பிரச்னைகளைத் தடுத்து உரிய நேரத்தில் சீர்செய்வதற்கு கூட்டுத்தாபனம் துரித நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஐ) | முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டவாறு நிராகரிக்கப்பட்ட சரக்கு அனுப்பல்களின் சரக்குகளை வெளியேற்றுவதற்கு முன்னர் ரூபா 1,617 மில்லியன் தொகை சுங்க தீர்வைகள் மற்றும் வரிகள் என கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது, இதில் ரூபா 648 மில்லியன் தொகையான கலால் வரி சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், 2017 சனவரி முதல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கொடுப்பனவுகளிலிருந்து அந்தத் தொகையை அறவிடுவதற்கோ அல்லது அவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கோ கூட்டுத்தாபனத்தால் முடியவில்லை. | CPC முன்னைய ஆண்டுகளில் இருந்து நிலுவையாக உள்ள வரிகளை இன்னும் செலுத்தியிருக்கவில்லை என்றும், நிலுவைத் தொகையை செலுத்தும் வரை தொகை மீள்நிதியிடப்படமாட்டாது என்றும் குறிப்பிட்டு SL சுங்கத்திடம் இருந்து கடிதம் ஒன்றை CPC பெற்றுள்ளது, மதிப்பீட்டு அறிவிப்புக்களில் உள்ள சிக்கல்கள் காரணமாக CPC ஆல் முன்னைய சில வரித் தொகைகளைத் தீர்ப்பனவு செய்ய முடியவில்லை. தற்போது மதிப்பீட்டு அறிவிப்புக்கள் SL சுங்கத்தால் சீர்செய்யப்படுகின்றன.<br><br>CPC நிலுவையாக உள்ள வரிக் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்தவுடன், கணக்காய்வு ஐயவினாவால் | அவற்றை அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கு இலங்கை சுங்கம் ஒப்புக்கொண்டது. | |
| (ஒ) | முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத்தாபனம், CPSTL மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவற்றுக்கு இடையே CPSTL ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன வள திட்டமிடல் (ERP) முறைமையின் ஈடுபாடு தொடர்பாக அவர்களின் தனிப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக எந்த உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ (MOU) கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், ERP முறைமை, குறிப்பாக எரிபொருள் இருப்பு மதிப்பாய்வு நடவடிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு செயற்பாடுகளுக்கு கூட்டுத்தாபனத்தால் செயற்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | SAP (ERP) முறைமையை பொதுவாகப் பயன்படுத்துவது தொடர்பாக முறையான உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஓ)** | **எரிபொருள் எண்ணெய் பெறுகை** | | |
| (i) | 2012 மார்ச் 14 ஆம் திகதிய ஏஎம்ஏ/12/0295/510/003/ரீபீஆர் ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து பெற்றோலிய பொருட்களின் பெறுகையில் பிந்தைய தீர்ப்பனவு அடிப்படையில் நீண்ட காலத்திற்கு கால ஒப்பந்தங்களில் நுழைவதற்கு கூட்டுத்தாபனம் முயற்சி செய்ய வேண்டும். எனினும் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த எரிபொருள் எண்ணெய் அளவு 399,979 MT ஆகும். அல்லது மொத்த நுகர்வில் 47 சதவீதமாகும். மேலும் 547,900 MT அல்லது மொத்த நுகர்வில் 53 சதவீதம் முறையே முடிவடைந்த எரிபொருள் எண்ணெயாக இறக்குமதி செய்யப்படுவதற்கு | எரிபொருள் எண்ணெய்க்கான கால கேள்விகள் இருப்பு மதிப்பாய்வுக் குழுவால் (SRC) முடிவு செய்யப்படவில்லை, ஏனெனில் எரிபொருள் எண்ணெய் தேவை மழை நிலைமைகளுடன் உடனடியாக மாறுகிறது. மேலும் சுத்திகரிப்பு நிலையத்தால் உற்பத்தி செய்யப்படும் எரிபொருள் எண்ணெயின் அளவும் இந்த எரிபொருள் எண்ணெயின் இறக்குமதியை பாதிக்கிறது.<br><br>இந்த காரணங்களால், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் எரிபொருள் எண்ணெய் இறக்குமதியானது நீண்டகால ஒப்பந்தங்களின் (கால ஒப்பந்தம்) கீழ் | அமைச்சரவை தீர்மானத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு கூட்டுத்தாபனம் முயற்சி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டது, எனினும் 2021 மற்றும் 2022 இல் எந்த கால ஒப்பந்தமும் எட்டப்படவில்லை. | அமுல்ப்படுத்தப்படவில்லை. மேலும் திட்டமிட்டவாறு எரிபொருள் எண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை. | |
| **(ii)** | **எரிபொருள் எண்ணெய் பெறுகை விவரக்குறிப்புக்களை அவசரமாக திருத்துதல் (பீகே/48/2022)** | | |
| | • அந்த காலப்பகுதியில் PLATTS இன் விலை எதிர்வுகூறலின் பிரகாரம் பெற்றோலியத்தின் உலக சந்தை விலை படிப்படியாகச் சரிவைக் காட்டியிருந்தது. இருந்தபோதிலும், வணிக முகாமையாளர்கள் லேகானை (Laycan) 21 நாட்களுக்கு நீடிப்பதற்கும், லேகானை 2022 ஏப்ரல் 14-15 இலிருந்து 2022 மே 8-10 வரை மாற்றுவதற்கும் ஒப்புக்கொண்டனர், ஆனால் கூட்டுத்தாபனத்தின் சாதாரண பணம் செலுத்தும் நடைமுறைக்கு அப்பால் ஆரம்ப லேகானின் திகதிகளின் அடிப்படையில் பணம் செலுத்தப்படுகிறது. எனவே, பொருட்களை கொள்வனவு செய்வதில் உண்மையான அவசரம் இருந்தது என்பது கேள்விக்குரியதாக உள்ளது. இதன் விளைவாக, கூட்டுத்தாபனம் ரூபா 355.62 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 970,766 மதிப்பிடப்பட்ட மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்தது. | இந்த கேள்வி குறிப்பு: பீகே/48/2022 இற்காக 2022/04/14-15 இன் ஆரம்ப விநியோக லேகான் தொடர்பான நாணயக் கடிதங்களை (L/C) கூட்டுத்தாபனம் திறக்க தவறியிருந்தது: அந்த நேரத்தில், நாட்டில் ஏற்பட்ட கடுமையான நாணயமாற்று நெருக்கடி காரணமாக, இலங்கையில் உள்ள அரச வங்கிகள் மூலம் L/C ஐ வழங்குவது கடினமாக இருந்தது. இந்த விடயத்தில் வழங்குநர் 2022/05/8-10 புதிய விநியோக லேகானாக பரிந்துரைத்துள்ளார். இந்த முன்மொழிவு 2022/04/26 இல் நடைபெற்ற SRC இற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது SRC ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது வழங்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.<br><br>விலை மாறுமா என்பதைத் துல்லியமாகத் தீர்மானிக்க முடியாது, மேலும் விலை ஏற்ற இறக்கங்களைப் பற்றிய நீண்ட கால கணிப்புக்கள் எப்போதும் சரியாக இருக்காது. எனவே, இதுபோன்ற சந்தர்ப்பங்களில், விநியோக லேகானின் மாற்றம் குறித்து, ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குநருக்கு முன்மொழியப்பட்டவாறு விலையிடுவதற்கு ஆரம்ப விநியோக லேகானை பேணுவது வழக்கமான முறையாகும். | மிகவும் சிக்கனமான முறையில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| • அவசரகால அடிப்படையில் எரிபொருள் எண்ணெயை கொள்வனவு செய்வதற்கு SRC தீர்மானித்திருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிதி நம்பகத்தன்மை கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கப்பல் வரும் நேரத்தில் பட்டியலிட்டவாறு கப்பலில் இறக்க முடியாமல் போனதால் ரூபா 336,329,840 இற்கு சமமான ஐ.அ.டொலர். 873,584 மேலதிக மதிப்பிடப்பட்ட தாமதக் கட்டண கிரயம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | அப்போது நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக L/C ஐ திறக்கவோ அல்லது முற்பணக் கொடுப்பனவை மேற்கொள்ளவோ முடியாமல் இந்த கப்பலை கொழும்பில் உள்ள வெளியேறும் துறைமுகத்தில் நங்கூரமிட வேண்டியிருந்தது. | -மேற்படி- |

**(iii) விவரக்குறிப்புக்களுடன் இணங்காததன் காரணமாக SSCAPC அங்கீகாரத்துடன் எரிபொருள் எண்ணெய் (பீகே/11/2021) பெறுகை தொடர்பான கேள்வியை கூட்டுத்தாபனம் நிராகரித்ததுடன் இரண்டு தனித்தனி கேள்விகளாக (பீகே/13/2021 மற்றும் பீகே/16/2021) மீண்டும் அழைக்கப்பட்டது.**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| • கூட்டுத்தாபனம் சீரற்றதாக தீர்மானிக்கப்பட்ட விவரக்குறிப்புக்களை மாற்றாமல் இரண்டு கேள்விகளை மீளக்கோரியிருந்தமையும் லேகான் திகதிகள் மாத்திரமே மாற்றப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. விவரக்குறிப்புடன் இணங்காமல் நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (STEC) பரிந்துரை மற்றும் விசேட நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் (SSCAPC) அங்கீகாரத்துடன் முன்னர் நிராகரிக்கப்பட்ட அதே வழங்குநரிடமிருந்து கேள்வி வழங்கப்பட்டு கொள்வனவு | எரிபொருள் எண்ணெய் சரக்குகளை கேள்வி குறிப்பு: பீகே/13/2022 கட்டளையின் கீழ் கொண்டு வருவதன் முக்கிய நோக்கம் அந்த நேரத்தில் வெஸ்ட் கோஸ்ட் பவர் பிளான்ற் (WCPP) தயாரித்த எரிபொருள் எண்ணெய் தேவைகளுக்கு ஏற்ப நாட்டில் மின்சாரம் தயாரிக்க தேவையான எரிபொருள் எண்ணெயின் இருப்பை மட்டுப்படுத்தப்படுத்துவதாகும்.<br><br>இந்த காரணத்திற்காக, M/s வைற்றல் ஏசியா பிறைவேட் லிமிட்டட், S'pore இன் சலுகையில் உள்ள | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டது. எனினும், புதிய கேள்வியின் பிரகாரம் ஆரம்ப கேள்வியின் (பீகே/11/2021) பிரகாரம் வழங்கப்பட்ட விலையுடன் ஒப்பிடும்போது அதிக விலை தவணைக்கட்டணம் (premium) காரணமாக, கூட்டுத்தாபனம் ரூபா 76.73 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 390,238 தவிர்க்கக்கூடிய மேலதிக கிரயத்தை செலவிட்டிருந்தது. | விவரக்குறிப்புக்கள் கேள்வி குறிப்பு: பீகே/13/2021 இன் கீழ் மறுபரிசீலனைக்காக 2021.01.26 இல் WCPP இற்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்த விடயத்தில் மாத்திரமே இந்த விவரக்குறிப்புக்கள் அங்கீகரிக்கப்படும் என்பது அவர்களின் முடிவாகும். அதன் பிரகாரம் கேள்வி குறிப்பு: பீகே/13/2021 M/S M/s. வைற்றல் ஏசியா பிறைவேட் லிமிட்டட், S'pore இற்கு STEC இன் பரிந்துரைகள் மற்றும் SSCAPC இன் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டது. | |
| • அந்த காலப்பகுதியில் PLATTS இன் விலை எதிர்வுகூறல்களின் பிரகாரம் பெற்றோலியப் பொருட்களின் உலகச் சந்தை விலை படிப்படியாக அதிகரிக்கும் போக்கைக் காட்டியிருந்தது. அதன் பிரகாரம் நியாயமான எதிர்வுகூறல் எதுவும் செய்யப்படாத நிலையில், விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்பட்டால், லேகனின் மாற்றம் மற்றும் புதிய லேகனின் கீழ் கொள்வனவு செய்வதால் ரூபா 72.52 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 368,837 மதிப்பிடப்பட்ட நட்டத்தை கூட்டுத்தாபனம் தவிர்த்திருக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது. | உலக எண்ணெய் விலைத் தளம்பல் குறித்த நீண்ட கால எதிர்வுகூறல்கள் நடைமுறையில் காணப்படாததுடன் அந்த எதிர்வுகூறல்கள் எப்போதும் சரியாக இருப்பதில்லை. இந்த விலைத் தளம்பல்கள் குறித்து முடிவெடுப்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகும், மேலும் குறைந்த விலையைப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் பெற்றோலியத் தேவைப்பாட்டை சரியான நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனம் எப்போதும் முயற்சிக்கிறது. மேலும் அனைத்து உரிய கேள்விகளும் SRC ஆல் அதன் ஒருமித்த முடிவுகளின் அடிப்படையில் அழைக்கப்பட்டன. அந்த முடிவுகளுக்கு வழிவகுத்த நடைமுறை நியாயப்படுத்தல்கள் உரிய SRC அறிக்கைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. SRC வாரத்திற்கு ஒருமுறை கூடுவதற்கு முக்கிய காரணம் நாட்டில் தொடர்ந்து எண்ணெய் விநியோகத்தை பேணுவதாகும். | -மேற்படி- |

**(ஔ) டீசல் பெறுகை**

**(i) கால ஒப்பந்தத்தை இரத்து செய்வதன் மூலம் கோரப்படாத முன்மொழிவின் கீழ் டீசல் பெறுகை**

| | | |
|---|---|---|
| • கூட்டுத்தாபனம் 2022 மார்ச் 01 முதல் 2022 ஒக்தோபர் 31 வரை ஐ.அ.டொலர் 7.48 தவணைக்கணத்தில் 1,960,000 பீப்பாய்கள் டீசலை (LAD) கொள்வனவு செய்வதற்கு வழங்குநர் ஒருவருடன் ஒரு கால ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. பின்னர், அந்த கால ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனம் முற்கொடுப்பனவு முறையாக பீப்பாய்க்கு ஐ.அ.டொலர் 6.98 தவணைப்பண விலையில் கால ஒப்பந்தத்தை தீவிரமாக பேணுவதற்கு வழங்குநரால் வழங்கிய விருப்பத்தை இழந்திருந்தது. | அப்போது நாட்டில் ஏற்பட்ட நாணமாற்று நெருக்கடியால், இந்த கால ஒப்பந்தத்தை தீவிரமாக பேண முடியவில்லை.<br><br>அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு ஒரு பீப்பாய்க்கு ஐ.அ.டொலர் 6.98 விலையில் கால ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது, ஆனால் இந்த கால ஒப்பந்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் L/C ஐ வழங்குவதற்கு உட்பட்டு ஒரு பீப்பாய்க்கு ஐ.அ.டொலர் 7.48 விலையில் 180 நாட்கள் கடன் காலப்பகுதிக்காக இருந்தது. | -மேற்படி- |
| • எனினும், அத்தகைய கால உடன்படிக்கையின் செயலில் உள்ள காலப்பகுதியில், கூட்டுத்தாபனம் கால ஒப்பந்தத்தை கொண்டிருந்த அதே வழங்குநரிடமிருந்து 274,185 பீப்பாய்கள் மற்றும் 223,811 பீப்பாய்கள் அடங்கிய 497,996 பீப்பாய்கள் டீசலை முறையே பீப்பாயொன்று ஐ.அ.டொலர் 24 மற்றும் ஐ.அ.டொலர் 23 என்ற தவணைக்கட்டண விலையின் கீழ் 02 சந்தர்ப்பங்களில் முற்கொடுப்பனவு அடிப்படையில் கொள்வனவு செய்திருந்தது. எனவே, கூட்டுத்தாபனம் ரூபா 3,047.42 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8,252,081 மேலதிக கிரயத்தை ஏற்படுத்த வேண்டியிருந்தது. | முற்கொடுப்பனவு அடிப்படையில் ஒரு பீப்பாய்க்கு ஐ.அ.டொலர் 6.98 விலையில் வழங்குநர் இரண்டாவது முன்மொழிவை கூட்டுத்தாபன அதிகாரிகளால் அமுல்படுத்த முடியவில்லை. இந்திய கடன் வரிசையின் கீழ் அனைத்து டீசல் ஏற்றுமதிகளும் 2022 மே மாதத்தில் விநியோகம் செய்யப்பட்டன.<br><br>யூலையில் ஏற்றுமதி குறிப்பு: பீகே/139/2022 மற்றும் ஆகஸ்டில் பீகே/168/2022 ஆகியவற்றின் கீழ் இரண்டு சரக்குகள் எரிபொருளின் தேவை மற்றும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஓரளவிற்கு பேணுதல் ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டின் கண்டிப்பைக் கருத்தில் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டன. கோரப்படாத முன்மொழிவின் கீழ் இந்த இரண்டு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டளைகளும் தேவைப்படும் குறித்துரைத்த அங்கீகாரத்தை பின்பற்றி. M/s கோரல் எனேர்ஜி DMCC, UAE இடமிருந்து பெறப்பட்டுள்ளன. அதாவது, CPC இன் ஒப்புதலுடன் STEC பரிந்துரைகளின் பிரகாரம் SSCAPC இன் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த கோரப்படாத முன்மொழிவு வழங்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. | |
| | • 922,381 பீப்பாய் லங்கா ஓட்டோ டீசலை (LAD) முறையே பீப்பாய் ஒன்று ஐ.அ.டொலர் 17.00, ஐ.அ.டொலர் 19.87 மற்றும் ஐ.அ.டொலர் 13.83 தவணைக்கட்டணத்தில் 03 சந்தர்ப்பங்களில் ஏனைய இரண்டு வழங்குநர்களிடமிருந்து தொடர்புடைய கால ஒப்பந்தம் செயற்பாட்டில் இருந்த காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்தது. அதன் பிரகாரம், கூட்டுத்தாபனமானது ரூபா 3,381.69 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 9,146,741 மதிப்பிடப்பட்ட மேலதிக கிரயத்தை செலவிட்டுள்ளது. | நாட்டின் கண்டிப்பு, எரிபொருளின் தேவை மற்றும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஓரளவிற்கு பேணும் நோக்கத்தில் இந்த கட்டளைகள் பெறப்பட்டுள்ளன.<br><br>மேலும் இந்த கட்டளைகள் குறிப்பிட்ட பெறுகை நடைமுறையைப் பின்பற்றி கோரப்படாத முன்மொழிவின் கீழ் பெறப்பட்டுள்ளன, ஏனெனில் இந்த கோரப்படாத முன்மொழிவு உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் STEC பரிந்துரைகளின் பிரகாரம் SSCAPC இன் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| **(ii)** | **வெவ்வேறு PLATTS விலையைப் பயன்படுத்துவதன் காரணமாக மேலதிகக் கொடுப்பனவு**<br>இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருளின் விலை அல்லது கிரயமானது சிங்கப்பூர் PLATTS இல் தினசரி வெளியிடப்படும் விலைச் சுட்டெண்ணில் குறிப்பிட்ட விவரக்குறிப்புக்களுடன் தயாரிப்புக்களின் சராசரி விலையைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படுகிறது. | Platt's எரிவாயு எண்ணெய் 10 ppm விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் கோரப்படாத முன்மொழிவுக்காக LAD (எரிவாயு எண்ணெய் 500 ppm) விலையை வழங்குநர் சமர்ப்பித்துள்ளார். அந்த சமயங்களில் STEC மற்றும் SSCAPC என்பன இந்த LSD (எரிவாயு எண்ணெய் 10 | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நான்கு வபழங்குநர்களிடமிருந்து 8 ஏற்றுமதிகளை உள்ளடக்கிய 1,820,012 பீப்பாய்கள் லங்கா ஓட்டோ டீசலை (LAD) (எரிவாயு எண்ணெய் 500 ppm) கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்துள்ளது. எனினும், ஒப்பீட்டளவில் அதிக சராசரி PLATTS விலையைக் கொண்ட லங்கா சூப்பர் டீசல் (FOB சிங்கப்பூர் எரிவாயு எண்ணெய் 10ppm முறை) தொடர்பான PLATTS விலையின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், கூட்டுத்தாபனம் ரூபா 3,872.96 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10,499,898 மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்தது. | ppm) விவரக்குறிப்பிலிருந்து விலகி, தொடர்புடைய Platt’s இல் LAD (எரிவாயு எண்ணெய் 500 ppm) ஐப் பயன்படுத்தி விவரக்குறிப்புடன் உடன்படுவதற்கு வழங்குநரை கோர,இருந்தது.<br><br>அத்தகைய கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் வழங்குநர் அதை ஏற்றிருக்கவில்லை. மேலும், ஏனைய எந்தவொரு போட்டி மாற்று முன்மொழிவுகளும் இந்த நேரத்தில் பெறப்படவில்லை.<br><br>இந்த விவரக்குறிப்புக்களுடன் (எரிவாயு எண்ணெய் 10 ppm) LAD (எரிவாயு எண்ணெய் 5 0 0 ppm) ஐ கொள்வனவு செய்வது தொடர்பாக CPC முகாமைத்துவத்தால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. | |
| **(iii)** | **இந்திய கடன் வரிசையின் கீழ் டீசல் கொள்வனவு**<br>இந்தியக் கடன் வரிசையின் கீழ் இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 599,722 பீப்பாய்கள் லங்கா ஓட்டோ டீசலிற்காக (LAD) விலை நிர்ணயம் செய்யும்போது, லங்கா சூப்பர் டீசல் தொடர்பான வெவ்வேறு PLATTS விலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் காரணமாக கூட்டுத்தாபனம் ரூபா 1,669.54 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4,582,179 மதிப்பிடப்பட்ட மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்தது. | 200 மில்லியன் இந்திய கடன் உதவித் தொகைக்கு உட்பட்டு, வழங்குநரான IOC, இந்தியா (இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனம், இந்தியா) மூலம் இந்த கட்டளை முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. Platt's எரிவாயு எண்ணெய் 10 ppm விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் LAD (எரிவாயு எண்ணெய் 500 ppm) ஐ வழங்குவதற்கான விலையை வழங்குநர் அங்கு குறிப்பிட்டுள்ளார். எரிவாயு எண்ணெய் 500ppm விலை சுட்டெண்ணுடன் உடன்படுமாறு CPC கோரியுள்ளது, ஆனால் வழங்குநர் இணங்கியிருக்கவில்லை.<br>இந்த காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட கடுமையான நாணயமாற்று நெருக்கடியின் காரணமாக STEC மற்றும் SSCAPC ஆகியவை அந்த | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | நேரத்தில் இந்த LSD (எரிவாயு எண்ணெய் 10 ppm) விலைச் சுட்டெண்ணிலிருந்து விலகி, LAD (எரிவாயு எண்ணெய் 500 ppm) ஐ பொருத்தமான Platt's இல் பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டது. மேலும், இந்த நேரத்தில் போட்டியிடும் வேறு மாற்று முன்மொழிவுகள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | |
| **(க) கச்சா எண்ணெய் பெறுகை**<br>சந்தையில் ஒப்பீட்டளவில் அதிக விலையைக் குறிக்கும் விலைச் சுட்டெண் (திகதியிடப்பட்ட Brent விலை) மீளாய்வாண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்தால் சிங்கப்பூர் PLATTS இல் வெளியிடப்பட்ட அத் தயாரிப்புகளுக்கான தொடர்புடைய விலைச் சுட்டெண்ணை பயன்படுத்துவதற்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட 2,023,509 பீப்பாய்கள் கச்சா எண்ணெய் (Siberian Light and Ural) தொடர்பான விலையை (கிரயம்) தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, கூட்டுத்தாபனம் ரூபா 17,876 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48,603,726 மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்தது. | ஏற்றுமதி குறிப்பு: சீஆர்/15/2022 மற்றும் சீஆர்/38/2022 இன் கீழ் இரண்டு சரக்குகள் STEC பரிந்துரைகள் மற்றும் வழங்குநர் சமர்ப்பித்த விலை சுட்டெண்ணின் அடிப்படையில் SSCAPC இன் அங்கீகாரத்துடன் கோரப்படாத முன்மொழிவுகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டன.<br><br>பதிவு செய்த வழங்குநர்களுக்கு தெரிவிக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் யாரும் விலைமனுக்களை சமர்ப்பிக்காததாலும், இந்த காலப்பகுதியில் கச்சா எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்கு வேறு மாற்று வழி இல்லாததாலும் இரண்டு கச்சா எண்ணெய் இருப்புகளை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. மேலும், கச்சா எண்ணெய் சுமார் இரண்டு சரக்குகளை கொள்வனவு செய்யாததால் நாட்டின் எரிசக்தி தேவையை சுத்திகரிப்பு ஆலையால் பூர்த்தி செய்ய முடியாமல் நாடு நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும். | -மேற்படி- |
| **(கா) தாமதக்கட்டண கிரயம்** | | |
| கூட்டுத்தாபனத்தின் ஏடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் | 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | 40,000MT முடிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் கப்பலுக்கு ஐ.அ.டொலர் 15,000 - 21,500 இற்கு இடையிலான வீச்சில் இருந்த நாளொன்றுக்கான சராசரி தாமதக்கட்டண விகிதம் மீளாய்வாண்டில் ஐ.அ.டொலர் 16,000 - 55,000 இற்கு இடையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு கச்சா எண்ணெய் கப்பலுக்கு ஐ.அ.டொலர் 4,000-17,500 இற்கு இடையிலான வீச்சில் இருந்த நாளொன்றுக்கான தாமதக்கட்டண விகிதம் மீளாய்வாண்டில் ஐ.அ.டொலர் 45,000 - 120,000 இற்கு இடையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் வழங்குநர்கள் கோரும் தாமதக்கட்டணங்கள் ரூபா 572 மில்லியனில் இருந்து ரூபா 5,463 மில்லியன் வரை அதிகரித்திருந்தது அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 9 தடவைகள் அதிகமாகும். | ஆண்டில் கப்பல் போக்குவரத்துக்கான தாமதக்கட்டண கிரயம் அதிகரிப்பதற்கான காரணம் இந்தக் காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியாகும். இந்த சூழ்நிலையின் காரணமாக, வழங்குநருடன் இணங்கப்பட்டவாறு சரியான நேரத்தில் கட்டளையிடப்பட்ட எண்ணெய் சரக்குகளுக்கான L/C ஐத் திறப்பது CPC இற்கு மிகவும் கடினமாக இருந்தது. சில நேரங்களில் எண்ணெய் தாங்கிகள் வெளியேறும் துறைமுகத்தில் பல நாட்களுக்கு நங்கூரமிட்டு L/C அல்லது முற்பணக் கொடுப்பனவு ஒப்புக்கொண்டவாறு கொடுக்கப்பட்டது. இந்த சூழ்நிலையின் அடிப்படையில், வழங்குநர்கள் உரிய கப்பல்களுக்கான தாமதக்கட்டண விகிதத்தை தொடர்ந்து அதிகரித்துள்ளனர்.<br><br>கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள வெளியேறும் துறைமுகத்தில் கடுமையான கப்பல் நிலைமைகள் காரணமாக வழங்குநர்களால் முன்மொழியப்பட்ட கப்பல்களின் தாமதக்கட்டண விகிதம் அதிகமாக உள்ள போதிலும் அந்த கப்பல்கள் எண்ணெய் சரக்குகளை இறக்குமதி செய்வதற்கு பயன்படுத்த வேண்டியிருந்தது. அந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யக்கூடிய சந்தையில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான கப்பல்கள் மாத்திரமே உள்ளன. | |
| **(கி)** | **இந்தியக் கடன் வசதியின் கடன் மீள்கொடுப்பனவு**<br>இலங்கைக்கான பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு | CPC இன் நிதி நிலைமை, கிரய பிரதிபலிப்பு விலையிடல் முறை இல்லாததாலும், ஐ.அ.டொலருக்கு எதிராக | உடன்படிக்கை மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் |

செய்வதற்கு ஐ.அ.டொலர் 500 மில்லியன் குறுகிய கால கடன் வசதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு 2022 பெப்ரவரி 02 இல் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும், இந்திய அரசாங்கத்தின் சார்பாக இந்திய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் (EXIM வங்கி) இடையில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. மேலும், பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் பெறப்பட்ட மற்றுமொரு கடன் வசதியிலிருந்து ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், கூட்டுத்தாபனமும் அரசாங்கமும் 2022 ஏப்ரல் 28 இல் பயன்படுத்துவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கடன் மீள்கொடுப்பனவு தொடர்பாக இரண்டு கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தன. அந்த உடன்படிக்கைகளின் 2.03 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு சரக்குக்கும் ஐ.அ.டொலருக்கு சமமான இலங்கை ரூபாவில் கடன்களின் முதல் தொகையை இறக்குமதியாளர்/ CPC இன் வங்கிக்கு இறக்குமதி தீர்வுசெய்தல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு (நிதி அமைச்சின் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்) திருப்பிச் செலுத்த வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியை இது விஞ்சியிருந்தும் ரூபா 228,770 மில்லியன் நிலுவைத் தொகையை கூட்டுத்தாபனம் தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் 2022 ஆம் ஆண்டில் ரூபா 615 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே, CPC நாட்டிற்கு ஒரே நேரத்தில் எரிபொருள் விநியோகத்தை தொடர்வதை உறுதி செய்யும் அதே நேரம் மேற்படி கடனைத் தீர்ப்பனவு செய்யும் நிலையில் இருக்கவில்லை. இந்த நிலைமை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் நிதி அமைச்சிற்கு தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களின் ஐந்தொகையை மறுசீரமைப்பதற்காக 2023/07/05 ஆம் திகதிய 23/1200/604/118 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ், CEB மற்றும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றிலிருந்து CPC இற்கு பெறப்பட வேண்டிய வியாபாரத்துடன் ஐ.அ.டொலர் 697 மில்லியன் மேற்படி கடன் மீதியை ஈடுசெய்வதற்கு நிதி அமைச்சு ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ளது. பிரகாரம் நிலுவை மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 32,344 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 250,925,169 தொகை 2013 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பாக தெஹ்ரானில் உள்ள தேசிய ஈரானிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்காவால் ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளுக்கு இணங்க மேற்குறிப்பிட்ட நிலுவையாக உள்ள மீதி தீர்ப்பனவு செய்யப்படவில்லை. இந்த நிலுவை மீதி ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் நாணயமாற்று விகிதத்தில் கொடுக்கல்வாங்கலின் தொடக்கத்திலிருந்து செலுத்த வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு, அந்தந்த வருடத்தின் நாணமாற்று ஆதாயம் அல்லது நட்டம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி மற்றும் திரண்ட நாணயமாற்று விகித வேறுபாட்டு நட்டம் (2013 முதல் 2022 வரை) என்பன முறையே ரூபா 93,246 மில்லியன் மற்றும் ரூபா 61,838 மில்லியன் வரை அதிகரித்திருந்தன. மீளாய்வாண்டிற்கான நாணயமாற்று நட்டம் ரூபா 42,308 மில்லியனாக இருந்தது. கட்டுப்படுத்த முடியாத வெளிப்புறக் காரணிகளால் அதற்கான கொடுப்பனவு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது. எனினும், ஐ.அ.டொலரை விட இலங்கை ரூபா படிப்படியாக குறைந்து வரும் சூழ்நிலையில், மாற்று படிவங்கள் மூலம் கூட்டுத்தாபனம் அந்த தொகையை தீர்ப்பனவு செய்ய தவறியிருந்தது. | எண்ணெய் பண்டமாற்று ஏற்பாட்டிற்கான தேயிலையை செயற்படுத்துவதன் மூலம் ஈரானுக்கு ஐ.அ.டொலர் 250.0 மில்லியன் இலங்கையின் எண்ணெய்க் கடனை தீர்ப்பனவு செய்வதற்கு இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, இலங்கை தேயிலை சபை, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் பங்குபற்றலுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. நிலுவைத் தொகை மேற்படி கலந்துரையாடல்களின் முடிவுகளின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படும். | இது தொடர்பான கிரயம் மற்றும் ஏனைய விளைவுகளை குறைப்பதற்கு கூட்டுத்தாபனம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஆ) **பெற்றோலியப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம்**<br>நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் திறன் மற்றும் நாட்டில் தற்போது செயற்பட்டு வரும் புகையிரதம் மற்றும் பவுசர் போக்குவரத்து முறைமை | உள்ளடக்கத்துடன் இணங்கப்பட்டது. | கூட்டுத்தாபனம் அறிக்கையின் பரிந்துரைகளை முறையாக மதிப்பீடு செய்து |

உட்பட எரிபொருள் போக்குவரத்து குழாய் முறைமையின் சரியான தன்மை மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை, பெற்றோலிய களஞ்சிய வளாகத்தின் சீரான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்கான பரிந்துரைகளுடன் பாராளுமன்றத்தில் பட்டியலிடப்பட்டது. இந்த கணக்காய்வு அறிக்கையில், நாட்டில் உள்ள பெற்றோலிய களஞ்சிய வளாகம் மற்றும் எரிபொருள் போக்குவரத்து செயன்முறை ஆகியவற்றின் சீரான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, கூட்டுத்தாபனத்தால் பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்காதமை வலியுறுத்தப்பட்டது. எனினும், பெற்றோலிய களஞ்சிய வளாகத்தின் சீரான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்காக அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நியாயமான முறையில் முயற்சித்திருந்ததா என்பதை கணக்காய்வால் கண்டறிய முடியவில்லை.

உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் உள்ள பெற்றோலிய களஞ்சிய வளாகம் மற்றும் எரிபொருள் போக்குவரத்து முறைமைகளின் சீரான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**(இ) திருகோணமலை தொட்டி பண்ணை**

12,500 கனமீற்றர் (m3)(10,000 MT) கொள்ளளவு கொண்ட 100 எண்ணெய் தாங்கிகளைக் கொண்ட தொட்டி பண்ணை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய வசதிகள் 1930 ஆம் ஆண்டில் திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தொட்டி பண்ணைக்கு சொந்தமான 358.553 ஹெக்டெயர் பரப்பளவு கொண்ட காணி இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் 999 வருட காலப்பகுதிக்கு பிரித்தானிய அரசாங்கத்தின் Lord High Admiralty இன் ஆணையாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1961 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், கூட்டுத்தாபனம் 250,000 ஸ்டேர்லிங் பவுண்ட்களை மூன்று தவணைகளில் செலுத்தியிருந்ததுடன் தலைவர் CPC வழங்கிய பணிப்புரைகளின் பேரில், CPC உத்தியோகத்தர்கள் குழு, தொட்டிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு மற்றும் குழாய் முறைமைகளின் நிலைமை மதிப்பீடொன்றை மேற்கொண்டு, வணிக மாதிரியை 2016 இல் முன்மொழிந்தது. அந்த தொட்டிகளில் நிலவும் புவிசார் அரசியல் சிக்கல்கள் காரணமாக, எந்தவொரு தரப்பினராலும் முன்மொழியப்பட்ட அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு CPC அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பின்னணியில், 2020 ஆம் ஆண்டில், CPC மீண்டும்

தொடர்புடைய வணிகங்களை மேற்கொள்வதற்கு ஏற்றதாக பண்ணையை மேற்கொள்ளக்கூடியவாறு சீனா விரிகுடா எண்ணெய் தாங்கி பண்ணை வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்காக முறையான மூலோபாய திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கு உடனடியாக கவனம் செலுத்தப்பட

காணி, தொட்டி பண்ணை, கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை 1964 ஏப்ரல் 01 முதல் கையேற்றிருந்தது. எனினும், மேற்படி காணிக்காக அரசிடம் இருந்து எந்த சட்ட ஆவணங்களும் நாளதுவரை பெறப்பட்டிருக்கவில்லை.

2003 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் LIOC மற்றும் கூட்டுத்தாபனத்துடன் களஞ்சிய வசதிகள் மற்றும் காணியை 35 வருட காலப்பகுதிக்கு LIOC இற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது, மேலும் குத்தகை உடன்படிக்கை திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் குத்தகை உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். எனினும், கூட்டுத்தாபனம் குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருக்காததுடன் தொட்டிகளை இதுவரை பயன்படுத்தியிருக்கவில்லை. எனினும், 2003 ஆம் ஆண்டு முதல் அந்த சொத்துக்களை LIOC பயன்படுத்துகிறது. கைவிடப்பட்ட மேல் பகுதியில் உள்ள 84 தொட்டிகளை நவீனமயமாக்குவதற்கான ஆரம்ப முடிவெடுக்கும் நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 29 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும், தொட்டி வளாகத்தின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு தேவையான நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்படிக்கை தொடர்பில், கூட்டுத்தாபனமும் LIOC உம் றிங்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் ஒரு கூட்டு நிறுவனத்தை நிறுவியிருந்த போதிலும் தொடர்புடைய வணிகங்களை மேற்கொள்வதற்கு ஏற்றதாக பண்ணையை மேற்கொள்ளக்கூடியவாறு சீனா விரிகுடா எண்ணெய் தாங்கி பண்ணை வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்காக முறையான மூலோபாய திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டு பயன்பாட்டிற்கான பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக மேல் தொட்டி பண்ணையில் உள்ள 24 எண்ணிக்கையிலான களஞ்சியப்படுத்தல் தொட்டிகளை புதுப்பிப்பதற்கு ஒரு விரிவான அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தது. இது விநியோக மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் கணிசமான கிரய சேமிப்புக்களை கொண்டிருக்கும். மேலும் ஒரு முன்-சாத்தியவள ஆய்வு உள்நாட்டில் நடாத்தப்பட்டது.

பின்னர் 2022 சனவரியில் கைச்சாத்திடப்பட்ட "சீனா விரிகுடா எண்ணெய் தாங்கி பண்ணையின் உடைமை, அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டிற்கான வழிமுறைகள்" உடன்படிக்கையின் கீழ், CPC ஆனது சீனா விரிகுடா மேல் தொட்டி பண்ணையில் உள்ள 24 எண்ணிக்கையிலான ஸ்ரீல் களஞ்சியப்படுத்தல் தொட்டிகளை அபிவிருத்திக்காகப் பெற்றுள்ளது. மேலும், 2021.12.24 இல் இந்த தொட்டி பண்ணைக்காக, மேல்நிலை தொட்டி பண்ணையில் உள்ள 61 எண்ணிக்கையிலான தொட்டிகளை அபிவிருத்தி செய்வதற்காக எரிசக்தி அமைச்சரின் வழிகாட்டலின் கீழ், றிங்கோ பெற்றோலியம் டேர்மினல் (பிறைவேட்) லிமிட்டட் என்ற CPC துணைக் கம்பனி உருவாக்கப்பட்டது.

வேண்டும்.

**(ஈ) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்**

(i) முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் (1969 இல் நிறுவப்பட்டது) நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையம் ஒரு அடிப்படை சுத்திகரிப்பு நிலையமாக இருந்ததுடன் நாட்டில் அதிகரித்து வரும் பெற்றோலிய பொருட்களின் தேவையை பூர்த்தி செய்ய இயலவில்லை. மேலும் இந்த சுத்திகரிப்பு நிலையம் குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை வழங்கும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற உயர் பெறுமதி தயாரிப்புக்களுக்கு அதன் இயக்க திறனை அதிகப்படுத்துவதன் மூலம் கீழே உள்ள தயாரிப்புகளை மேம்படுத்தும் திறன்களுடன் இயங்கும் சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த இலாப எல்லையுடன் செயற்படுத்தப்படுகிறது. எனினும், CPC அதனது தயாரிப்புக்களை சந்தைக்கு செலவு குறைந்த முறையில் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் (SOREM) செயற்திட்டம் அல்லது மாற்று செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியவில்லை. மேலும், அந்த நோக்கத்திற்காக ரூபா 1,003 மில்லியன் செலவிட்டு கையகப்படுத்தப்பட்ட காணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றிருந்தது.

சுத்திகரிப்பு விரிவாக்கம் மற்றும் மாற்றல் (SOREM) செயற்திட்டம் பல்வேறு காரணங்களால் கணிசமான காலத்திற்கு (10 ஆண்டுகளுக்கும் மேலாக) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் செயற்திட்டத்தின் சாத்தியக்கூறுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. எனவே, ஒரு அடிப்படை பூர்வாங்க முன் சாத்தியக்கூறு ஒரு உள்ளக குழுவால் செய்யப்பட்டது. அதன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தற்போதுள்ள சுத்திகரிப்பு ஆலையில் அத்தியாவசிய மாற்றங்களைச் செய்யும் போது, BOT அடிப்படையில் ஒரு தனி புதிய 100,000 bbl/d சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் நோக்கத்திற்காக M/S KBC அட்வான்ஸ்ட் ரெக்னோலஜீஸ் பிறைவேட் லிமிட்டட்டால் விரிவான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சுத்திகரிப்பு ஸ்தாபிப்பிற்கான முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) அழைப்பதற்கான பெறுகை செயன்முறையைத் தொடங்குவதற்கு, வரிசை அமைச்சால் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு, அதற்கான அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டத்திற்கு மேலதிகமாக 100 ஏக்கர் காணி தேவைப்படுகின்றமை இனங்காணப்பட்டு, ஏறத்தாழ 23 ஏக்கர் காணியை கையகப்படுத்தும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கும், குறைந்த கிரயத்தில் நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதிய ஒன்றை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ii) | கச்சா எண்ணெய் பற்றாக்குறையால் சுத்திகரிப்பு நிலையம் பலமுறை மூடப்பட்டிருந்தது, இதன் விளைவாக கணிசமான மனிதவளம் மற்றும் ஏனைய வளங்கள் விளைவற்றிருந்தன. எனினும், அனைத்து உண்மைகளையும் விரிவாகப் படித்து சுத்திகரிப்பு நிலையத்தை நடாத்துவதன் பொருளாதார மற்றும் சமூக மதிப்பின் முறையான மதிப்பீடு இதுவரை நிறுவன மட்டத்தில் செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னர் பொருளாதார மற்றும் சமூக தாக்கம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வனத்தமுல்லையில் உள்ள ஹல்கஹ கும்புர காணி LP எரிவாயு செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானத்தின் நோக்கத்திற்காக ரூபா 10.6 மில்லியனிற்கு கையகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த காணி உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல், 700 இற்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. | இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சரியானதாகும். | அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்புக்களை அகற்றி, அந்த ஆதனத்தை கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மஹாஹேனா காணியை ரூபா 0.63 மில்லியனை செலவிட்டு கையகப்படுத்தியிருந்ததுடன் அது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த காணி 1986 இல் கையகப்படுத்தப்பட்ட பின்னரும் முந்தைய உரிமையாளரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. | கொலன்னாவை பிரதேச செயலாளரிடம் CPC இழப்பீட்டை வைப்பிலிட்டுள்ள போதிலும் இந்த காணிகளின் வெற்று உடமையை CPC இற்கு வழங்குவதற்கு கொலன்னாவ பிரதேச செயலாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டம் (SORAP) 2017 மே 05 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அங்கீகரிக்கப்பட்ட SORAP இன் தொழில்முறை மற்றும் கல்வித் | 'A', 'B' மற்றும் 'C' தரங்களுக்கான திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையை (SORAP) மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மூலம் திறைசேரிக்கு அவர்களின் அங்கீகாரத்திற்காக ஏற்கனவே | அனைத்து ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் போன்றன அங்கீகரிக்கப்பட்ட SORAP இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தகைமைகள் மற்றும் அனுபவங்களின் குறைந்தபட்ச தேவைப்பாடுகள் தொடர்பான ஏற்பாடுகளைப் புறக்கணித்து கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று வகுதியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் விளைவாக, தேவையான அனுபவங்களுடன் தொடர்புடைய தொழில்முறை மற்றும் கல்வித் தகைமைகளுடன் மிகவும் பொருத்தமான உத்தியோகத்தர்களை கவர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் திறன் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தடுக்கப்பட்டிருந்தது. | அனுப்பியுள்ளோம். | |
| (ஆ) கூட்டுத்தாபனம் அதன் பதவியணியினரிற்கு மோட்டார் வாகனக் கடன்கள், வீடமைப்புக் கடன்கள், வீடு திருத்தல் கடன்கள், இடர் கடன்கள், சிக்கனச் சங்கக் கடன்கள், விசேட கடன்கள், இடையூறுக் கடன்கள், முற்பணங்கள் போன்ற பல கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மொத்த கடன் ரூபா 4,300 மில்லியனிற்கு மேற்பட்டிருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் போதிய நிதி இல்லாததால், மிக அவசர மற்றும் முக்கியமான மூலதன மேம்பாட்டுப் பணிகளை கூட்டுத்தாபனம் தாமதப்படுத்தியிருந்தமை அல்லது பிற்போடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிதியைப் பயன்படுத்தி பெரிய அளவிலான கடன் போட்போலியோவை (portfolio) பேணுவது அதை மோசமாக பாதிக்கும். எனினும், ஊழியர்களுக்கு இடையூறு ஏற்படாமல் மேற்படி பிரச்சனையை சமாளிப்பதற்கு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு கடன் திட்டத்தை வழங்குவதில் சரியான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களின் நலனுக்காகவும், ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் பதவியணிக் கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன. சம்பளத்தில் இருந்து மாதாந்தம் கடன் அறவிடப்படுகிறதால், காசுப்பாய்ச்சலிற்கு பெரிய சுமை காணப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நிதி ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு கடன் வழங்கும் திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |